அவர்கள் அதற்குச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றத் துறைகள் எல்லாம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன.

கள்ளக்குறிச்சிக்குக் கலைக்கல்லூரி

***304 வினா—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியில் ஒரு கலைக் கல்லூரி கட்டும் திட்டம் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். தருமலிங்கம் : மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள், அங்கே கலைக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அந்த இடம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதால் இதைப்பற்றி மீண்டும் பரிசிலனைசெய்து அந்தக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கள்ளக் குறிச்சிக்குப் பக்கத்திலுள்ள விருத்தாசலத்தில் ஒரு கலைக் கல்லூரி இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஆத்தூரிலே ஒரு கல்லூரி வந்து இருக்கிறது. கள்ளக்குறிச்சியிலே ஒரு கல்லூரி வரவேண்டு மென்றால் 5 லட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கப்படவேண்டும், அத்தோடு 40 ஏக்கர் நிலமும் அளிக்கப்படவேண்டும். தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கல்லூரிகள் பக்கத்திலே பக்கத்திலே அமைந்திருக்கின்ற காரணத்தினால் புதிதாக இப்பொழுது அங்கே ஒரு கலைக் கல்லூரி தேவையில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய உயர்நிலைப் பள்ளிகள்

***305 வினா—திரு. டி. வி. சம்பத் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் 5 மைல் சுற்றளவிற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்க வேண்டும் என்ற வரம்பு ஏதேனும் உள்ளதா?

1973 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கட்டாயமான வரம்பு இல்லை.

திரு. டி. வி. சம்பத் : தலைவர் அவர்களே, தற்போது கிராமப் புறங்களிலே இருக்கிற மக்கள் படிப்பதற்கு ஆர்வம் காட்டுகிற இந்தச் சமயத்தில் மூன்று மைல் தூரத்தில் உள்ள கிராமங்களுக்கு எல்லாம் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு உயர் நிலைப்பள்ளிகளை அமைக்க அரசு முன்வருமா.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக கருத்து மேற்கொள்ளப்பட்டிருப்பது. ஐந்து மைல்கள் சுற்று வட்டாரத்திற்கு ஒரு உயர் நிலைப்பள்ளி இருக்கவேண்டும் என்பது தான். அந்த நிலையில் அந்த உயர் நிலைப்பள்ளியில் போதுமான அளவுக்கு மாணவமாணவியர்கள் வந்தபிறகு வேண்டுமானால் இரண்டாவது உயர் நிலைப்பள்ளி அமைப்பதுபற்றிப் பரிசீலிக்க லாம். இப்பொழுதுகூட சில உயர் நிலைப்பள்ளிகளில் போதுமான அளவுக்கு மாணவமாணவியர்கள் கிடைக்காத நிலையில் மொத்தம் இரண்டு ஆயிரத்து அறுநூற்றுச் சில்லரைப் பள்ளிகளில் 600 பள்ளி களில் போதுமான மாணவ மாணவியர் வந்து சேராத நிலையில் 6 பேர்கள், 7 பேர்கள், 8 பேர்கள் என்றளவிற்குத்தான் மாணவர்கள் ஒரு வகுப்பிலே இருக்கின்ற அளவுக்கு இருக்கின்றன. அவை யெல்லாம் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட உயர் நிலைப்பள்ளிகள் என்ற காரணத்தினால்தான் அவைகளையெல்லாம் மூடாமல் வைத் திருக்கிறோம். போதுமான மாணவ மாணவியர்கள் சேருவார்கள் என்ற நம்பிக்கை இருந்து நிதி முதலிய வசதிகள் எல்லாம் இருந்தால் அப்படிப்பட்ட நிலைமையிலே வேண்டுமானால் அனுமதி அளிக்கப் பரிசிலனை செய்யப்படுகிறது.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister has stated that there are several schools where we do not have enough students. But there are several areas in Tamil Nadu where wo do not have enough high schools. So, may I know whether the Government have taken concrete steps to increase the number of high schools to solve the problem of admission especially during the month of June?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கான முயற்சியிலேதான் அரசு ஈடுபட்டு இருக்கிறது. இந்த ஆண்டு கூட வரவு-செலவுத் திட்டத்திலே 40 உயர் நிலைப் பள்ளிகள்

ஏற்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும்கூட இந்த ஆண்டு 54 உயர்நிலைப்பள்ளிகள் ஏற்படுத்துவதற்கு, அனுமதி யளிக்கப்பட்டிருக்கிறது, நிதி வசதிகளைப் பொறுத்தும், மக்கள் தொகை மாணவ மாணவிகள் சேரும் நிலை, நெருக்கடி நிலைகள் இவற்றையெல்லாம் பொறுத்தும் இந்த ஆண்டு அதிகமான அளவிலே 54 உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. ப. முத்துசாமி : புதிதாக உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த வேண்டுமானால் அதற்காக மக்கள் கொடுக்கவேண்டிய பங்குத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, பள்ளி பராமரிப்புச் செலவுக்காக 10 ஆயிரம் ரூபாய், முன்பணமாகவும், 5 ஏக்கர் நிலமும் கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டும், அதோடு, கட்டடம் கட்டுவதற்கு 12,500 ரூபாய் ஈட்டு மானியமாகக் கொடுக்கவேண்டும், அப்படிக் கொடுத்தால் அதற்குப் பிறகு அரசாங்கம் அதற்குரிய தொகையைக் கொடுக்கும். தற் காலிகமாகப் பள்ளியை நடத்துவதற்கு வசதிகள் செய்துதர வேண்டும், வேறு எந்தப் பள்ளிக்கும் போட்டியாக இருக்கின்ற அளவிலே இருக்கக்கூடாது. இது எல்லாம் அரசாங்கத்தின் சார்பிலே பள்ளி அமைக்கப்படுவதற்கு வேண்டியவையாகும். தனியார்கள் அமைக்கவேண்டுமானால் வேறு எந்தப் பள்ளியும் அதனால் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும், 1 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும், அதிலே முதலில் 50 ஆயிரம் ரூபாயும் பிறகு ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதமும் கொடுக்கவேண்டும். நிர்வாகத்தில் தேவைப்படும் பங்குத் தொகையும், பராமரிப்புச் செலவிற்காக 5 ஆயிரம் ரூபாய் ஆண்டிற்கும் கொடுக்கவேண்டு மென்ற அடிப்படையிலேயும் இதைத்தவிர இன்னும் சில நிபந்தனை களையும் நிறைவேற்ற வேண்டும்.

*306 வினா—**திரு. வெ. குருசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டியில் ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வாண்டு முதல் ஏற்படுத்தப்படும் ?